Embassy of the United States of America
Colombo

# PRESS RELEASE

Public Affairs Section
Tel: +94 (1) 249-8100 ● Fax: +94 (1) 244-9070
Email: shenjy@state.gov ● http://srilanka.usembassy.gov

Release No. 20150219T

## பொலன்னறுவையின் பாற்பண்ணை உற்பத்தியாளர்களின் விற்பனையை அதிகரிப்பதற்கு யுஎஸ்எயிட் உதவி

**பெப்ரவரி 19 2016-** பாற்பண்ணை உற்பத்தியாளர்கள், சிஜசி டெய்ரீஸ், மற்றும் மில்க் இன்டஸ்ரீஸ் லங்கா தனியார் நிறுவனம் ஆகியவற்றுக்கு இடையிலான பொலனறுவையின் பாற்பண்ணையாளர்களின் விற்பனையை அதிகரிப்பதற்கு உதவும் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வில் அமெரிக்கத் தூதுரகத்தின் பிரதிநிதிகளும், இலங்கையின் சிரேஷ்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர். யுஎஸ் எயிட்டின் பதில் பணிப்பாளர் ரீட் எய்சிலிமன், கிராமிய பொருளாதார விவகார அமைச்சர் பி ஹரிசன் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். இந்த நிகழ்வில் விவசாயிகள் தங்கள் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான கருவிகளை யுஎஸ்எயிட் நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொண்டனர்.

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான ஒத்துழைப்பு இந்த நாட்டில் எவ்வாறு மக்களின் வாழ்க்கையில் முன்னேற்றத்தை ஏற்படுத்துகின்றது என்பதற்கான உதாரணம் இதுவாகும்'' என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அதுல் கேஷப் தெரிவித்தார். ''பொலன்னறுவையில் பாலிற்கான நம்பகதன்மை மிக்க மூலத்தை ஏற்படுத்துவதன் மூலம் இந்த விவசாயிகளும், பால் நிறுவனங்களும் நன்மையடைவர்'' என அவர் தெரிவித்தார்.

இந்த விவசாயிகள் நவீன பால் தொழில்நுட்ப முகாமைத்துவ நடைமுறைகளை அறிந்துகொள்வதற்கு யுஎஸ்எயிட் அமைப்பு உதவுகின்றது. மேலும் தகுதி தராதரங்களை பூர்த்தி செய்பவர்களிடமிருந்து நாளொன்றிற்கு இரு முறை பால்சேமிப்பை மேற்கொள்வதற்கான கிராமத்தை அடிப்படையாக கொண்ட அமைப்பையும் உருவாக்குகின்றது. சிஜசி டெய்ரீஸ், மற்றும் மில்க் இன்டஸ்ரீஸ் லங்கா தனியார் நிறுவனம் ஆகியவற்றுடனான புரிந்துணர்வு உடன்படிக்கை பொலன்னறுவையின் பால் பண்ணையாளர்களிடமிருந்து இரண்டு வருடத்திற்கு பால்களை கொள்வனவு செய்வதற்கு வழிவகுக்கின்றது.

''இலங்கையின் பால் உற்பத்தி தொழிற்துறையை ஊக்குவிப்பதற்கு யுஎஸ்எயிட் வெளிப்படுத்தி வரும் அர்ப்பணிப்பிற்கு நாங்கள் நன்றி தெரிவிக்கின்றோம், இந்த பிரதேசத்திலும், வடக்கிலும் அது முன்னெடுத்துள்ள பணிகளை பார்த்து நாங்கள் வரவேற்கின்றோம்'' என அமைச்சர் ஹரீசன் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு, வடமத்திய மாகாணங்களை சேர்ந்த விவசாயிகளின் விவசாய நடைமுறையை ஊக்குவிப்பதற்கும், உணவு பாதுகாப்பினை உறுதிசெய்வதற்கும், யுஎஸ்எயிட் அமைப்பு உதவி புரிகின்றது. மேலும் வாழ்வாதார அபிவிருத்தி சந்தர்ப்பங்களிற்கு ஆதரவு வழங்குதல் திட்டத்தின் கீழ் 3000 குடும்பங்களின் வருமானத்தை உயர்த்துவதற்கும் யுஎஸ்எயிட் அமைப்பு உதவி புரிகின்றது. இந்த முயற்சி இலங்கை அரசாங்கம், உள்ளூராட்சி மற்றும் தனியார் துறையினருடன் இணைந்து முன்னெடுக்கப்படுகின்றது. பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள், யுத்தத்தால்

வாழ்க்கைத் துணையை இழந்த பெண்கள் மற்றும் மீள்குடியேற்றப்பட்டவர்களிற்கான உதவிகளில் முன்னுரிமை வழங்குவதற்கும் விசேட கவனம் எடுக்கப்படுகின்றது,

இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் மீட்சி மற்றும் மீள்குடியேற்றத்தை ஊக்குவிப்பை மையமாக வைத்து யுஎஸ்எயிட்டினால் முன்னெடுக்கப்படும் பல திட்டங்களை அமெரிக்க பிரதிநிதிகள் இந்த வாரம் பார்வையிட்டனர், யுஎஸ் எயிட்டின் பதில் இயக்குநர் ரீட் எய்சிலிமன் வடமத்திய மாகாணத்தில் திராட்சை மற்றும் காளான் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளை சந்தித்ததுடன் பெசன் பழ பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளிற்கு சாதனங்களையும், வடமாகாணத்தில் மீள குடியேறியவர்களிற்கு விவசாய நீர் இறைக்கும் இயந்திரங்களையும் வழங்கினார்.

-###-

**படவிளக்கம் 1:** “இலங்கை மக்களின் வாழ்க்கையினை மேம்படுத்துவதற்கு அமெரிக்காவின் பங்காளித்துவத்தின் மற்றுமொரு உதாரணமாக இது உள்ளது. பொலன்னறுவையில் பாலிற்கான நம்பகமான மூலத்தை உருவாக்குவதன் மூலம், பாற்பண்ணைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களும், பாற்பண்ணை நிறுவனங்களும் பயனடையும்” என அமெரிக்கத் தூதுவர் அதுல் கேஷப் தெரிவித்தார்.

**படவிளக்கம் 2:** பாலுற்பத்தியை அதிகரிப்பதற்கு உதவுவதற்கு யுஎஸ்யிட்டிடமிருந்து பாற்பண்ணையாளர்கள் சாதனங்களை பெற்றுக் கொள்ளும் நிகழ்வில் யுஎஸ்எயிட்டின் பதில் பணிப்பாளர் ரீட்டும், கிராமிய பொருளாதார விவகாரங்களுக்கான கௌரவ அமைச்சர் பீ ஹரீசனும் கலந்து கொண்டனர்.